### களவாடப்பட்ட ஒவ்வொரு வாக்கின் கனத்தையும் பீகார் மண்ணில் உணர முடிகிறது!

# பீகாரில் வாக்கு அதிகாரப் பயணத்தில் நானும் இணைந்தேன்!

## மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

பாட்னா, ஆக. 29 -



பீகார் மாநிலத்தில் வாக்கு அதிகாரப் பயணத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ள கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**பீகார் வந்தடைந்தேன். மதிப்பிற்குரிய லாலு பிரசாத் அவர்களின் மண் கண்ணில் தீயுடன் என்னை வரவேற்கிறது. களவாடப்பட்ட ஒவ்வொரு வாக்கின் கனத்தையும் மண்ணில் உணர முடிகிறது.**

**அன்பு இளவல்கள் ராகுல்காந்தி, தேஜஸ்வீ மற்றும் சகோதரி திருமிகு பிரியங்கா காந்தி ஆகியோருடன், மக்களின் வலியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாத ஆற்றலாக மாற்றும் வாக்கு அதிகாரப் பயணத்தில் நானும் இணைந்தேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் நேற்று முன்தினம் (27.08.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், சென்னை இந்தியன் வங்கி CSR நிதி பங்களிப்பு ரூ.15 இலட்சம் செலவில் அவசர ஊர்தி ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குனர் மரு.தேரணிராஜன், சென்னை வடக்கு மண்டலம் இந்தியன் வங்கி மேலாளர் மகேஷ்குமார், கிளை மேலாளர் திருமதி. மாலா, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அரிகரன், திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.மோகன் காந்தி, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரவிந்த், திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.சுரேஷ் பாபு, சென்னை ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குனர் மரு. மணி மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### குடியரசுத் துணைத் தலைவராக சுதர்சன ரெட்டி வந்தால் மட்டுமே

# நாடாளுமன்ற ஜனநாயக முறை காப்பாற்றப்படும்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, ஆக.29-



நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு எதிர்க்கட்சிகளை செயல்பட விடாமல் தடுக்கிறது.துணை குடியரசுத் தலைவராக சுதர்சன ரெட்டி வந்தால் மட்டுமே நாடாளு மன்றம் ஜனநாயக முறைப்படி நடைபெறும். நக்சல் ஆதரவாளர் என அவரைசொல்லும் பிரதமரும் உள்துறை அமைச்சரும் அவர்களது வரலாற்றை திருப்பிப் பார்க்க வேண்டும் என நெல்லையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார் .

தமிழக அரசின் காலை உணவு திட்டத்தின் நகர்ப்புற பகுதிகளில் விரிவாக்கம் செய்யப்பட்ட திட்டத்திற்கான தொடக்க விழா 26.082025 அன்று நடைபெற்றது.

சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் முதலமைச்சர் பகவத்மான் உள்ளிட்டோர் காணொலிக் காட்சி வாயிலாக தமிழகம் முழுவதும் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை செவன்டாலர்ஸ் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் முஅப்பாவு, மாவட்ட ஆட்சியர் இரா. சுகுமார், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல். ஏ. ஆகியோர் கலந்து கொண்டு திட்டத்தை துவக்கிவைத்து மாணவ மாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தினர்.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு தனது கரங்களால் குழந்தைகளுக்பு ஊட்டி விட்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இந்த திட்டம் நெல்லை மாவட்டத்தில் 210 பள்ளிகளில் 13 ஆயிரத்து 115 மாணவர்கள் உணவருந்தும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது ஏற்கனவே இந்த திட்டத்தின் மூலம் நெல்லை மாவட்டத்தில் 804 பள்ளிகளில் 34 ஆயிரத்து 277 பேர் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்திற்கு தமிழகத்திற்கு 2000 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு மறுத்துவிட்டது. தமிழக அரசு எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதை முன்னிறுத்தி பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 4 லட்சம் கோடியில் 50 ஆயிரம் கோடி கல்விக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது.முன்னாள் ஒன்றிய அமைச்சர் அனுராக் தாகூர் விண்வெளியில் முதன்முத லில் கால் வைத்தது அனுமன் தான் என சொல்லி உள்ளார்.இதற்கு பதில் அளித்த பேரவை தலைவர் மத்தியில் ஆளும் பி.ஜே.பி.ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் கொண்டவர்கள், பிற்போக்கு சிந்தனையான கருத்துக்களை தான் அவர்கள் பரப்புவார்கள். இந்தியா கூட்டணி துணை குடியரசுத் தலைவர் வேட்பாளரான சுதர்சன ரெட்டி நக்சல் ஆதரவாளர் என அமித்ஷா கூறியதற்கு நீதி அரசர்கள் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.

சுதர்சன் ரெட்டி மிகப் பெரிய வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்புகளை எல்லாம் வழங்கி உள்ளார். அவர் பொதுவான மனிதர், இதனை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சுதர்சன் ரெட்டி குறித்து பேசி இருப்பதை உள்துறை அமைச்சர் தவிர்த்து இருக்க வேண்டும். சுதர்சன் ரெட்டி நக்சல் ஆதரவாளர் அல்ல துப்பாக்கியை கீழே போட்டு சரணடையுங்கள் என்று தான் அவர் கூறினார்.

சுதர்சன் ரெட்டி மீது விமர்சனம் வைக்கும் பிரதமரும் உள்துறை அமைச்சர்களும் அவர்களது பழைய வரலாற்றை திரும்பி பார்த்தால் அவர்கள் யார் என்று தெரியும்.பா.ஜ.க கூட்டணியின் குடியரசுத் துணை தலைவர் வேட்பாளரான சி.பி ராதாகிருஷ்ணன் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் கொண்டவர்.அவரை நாங்கள் ஆதரிக்க முடியாது. முந்தைய துணை ஜனாதிபதி ஜெகதீஷ் தங்கர் அரசு செய்யும் குற்றத்தை சுட்டி காட்டியதால் தான் அவர் ராஜினாமா செய்ய நேரிட்டது. நாடாளுமன்றம் ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை. தேர்தல் ஆணையத்தில் நடந்த குளறுபடியை விவாதிக்க கேட்டதற்கு கூட விவாதிக்க ஒன்றிய அரசு மறுக்கிறது. சுதர்சன ரெட்டி துணை குடியரசு தலைவராக வெற்றி பெற்றால் நாடாளு மன்றம் ஜனநாயக முறைப்படி நடக்கும்.முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பெயரில் திருவாரூரில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என மசோதா நிறைவேற்றப்பட்டது.ஆனால் ஆளுநர் இதுவரை அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இது போன்று பல மசோதாக்கள் ஆளுநரால் கிடப்பில் போடப்பட்டுள்ளது.ஒன்றிய அரசு அனுமதி பெற்று மூன்று சதவீதம் அதிகமாக கடன் வாங்கி செய்யும் அனுமதி கோரிய நிதி மசோதா அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் அதுவும் நிலுவை யில் தான் உள்ளது. இமாச்சல் பிரதேசம் உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கு இது போன்ற மசோதாக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வளரக் கூடாது என்பதே ஒன்றிய அரசின் நோக்கம். அதனால் தொடர்ந்து தமிழகத்திற்கு எல்லா வகையிலும் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறார்கள். அமெரிக்க வரி விதிப்பால் தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் ஏற்றுமதி மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு பா.ஜ.க.வின் வெளியுறவு கொள்கை படுதோல்வி அடைந்தது காரணம் என்றார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அண்ணா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளின் –

# இளங்கலைப் பொறியியல் பட்டப்படிப்பு பாடத்திட்டத்தில் புதிய பாடங்கள் அறிமுகம்!

## அண்ணா பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவிப்பு!

சென்னை, ஆக. 29 -

அண்ணா பல்கலைக்கழகம், தனது இணைப்பு கல்லூரிகளில் பின்பற்றப்படும் இளங்கலைப் பொறியியல் பட்டப்படிப்பு பாடத்திட்டத்தில், புதிய பாடங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த பாடங்கள் வளர்ந்து வரும் தொழில் தேவைகள் மற்றும் உலகளாவிய கல்வி மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கல்வி ஒழுங்குமுறைகளை பின்பற்றி வடிவமைக் கப்பட்ட இந்த புதிய பாடத்திட்டம் மாணவர்களின் முழுமையான வளர்ச்சி, திட்ட அடிப்படையிலான கற்றல் மற்றும் எதிர்காலத்திற்கு தேவையான திறன்களை மையமாக கொண்டுள்ளதால், இது மாணவர்களின் கல்வி மற்றும் தொழில்முறை வளர்ச்சியை மேம்படுத்தும். இந்த புதிய பாடங்கள் கல்வியாளர்கள், தொழில் நிபுணர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களின் விஞ்ஞானிகள் மற்றும் முன்னாள் மாணவர்கள் ஆகியோர் அடங்கிய பாடத்திட்டக் குழுவால் (Board of Studies) வடிவமைக்கப்பட்டது. இதில் உள்ள அம்சங்கள் மாணவர்கள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், நிலையான நடைமுறைகள், இன்றைய சூழலில் அத்தியாவசியமான வாழ்க்கைத் திறன்களை பெரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்தின் முக்கிய அம்சமாக, 'product development' யை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு 'Capstone Design Project' 5வது பருவத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இதற்கான திட்ட குழு பல்வேறு துறைகளில் படிக்கும் மாணவர்களை கொண்டு உருவாக்கப்படுவதால், இது அவர்களிடம் பல்துறை அணுகுமுறையும் குழுவாக சேர்ந்து வேலை செய்யும் பண்பையும் ஊக்குவிக்கும்.

மேலும், இதன் மதிப்பாய்வு, அந்தத் திட்டத்துடன் தொடர்புடைய துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் மற்றும் தொழில் துறையைச் சார்ந்த நிபுணர்களாலும் மேற்கொள்ளப்படும். பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட படி, 5வது பருவம் முதல் அறிமுகப்படுத்தப்படும் Capstone Design Projectகளின் மூலம் பெறப்படும் மதிப்பெண்களையும் சேர்த்து, 8.5 அல்லது அதற்கு மேல் CGPA பெற்றவர்களுக்கு பொறியியல் பட்டத்துடன் கூடுதலாக 'Honours' Degree (சிறப்பு பட்டம்) மற்றும் 'Certificate of Appreciation' (பாராட்டுச் சான்றிதழ்) வழங்கப்படும். இந்த அணுகுமுறை, இளம் தலைமுறையின் புதுமையான சிந்தனைகளை சரியான நேரத்தில் வெளிக்கொண்டு வரவும் உலகளாவிய சவால்களை சமாளிக்கவும் மாநிலத்தின் எதிர்கால தலைமுறையை தயார் செய்ய மிகப் பெரும் வாய்ப்பாக அமையும்.

மாணவர்களுக்கு ஆங்கில மொழி வளமையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், இணைப்பு கல்லூரிகளில் வெளிநாட்டு மொழி பாடமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ், மாணவர்கள் ஜப்பானியம் அல்லது ஜெர்மானியம் அல்லது கொரிய மொழிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதன் அடிப்படைத் திறன்களை கற்க வேண்டும். இது, அதிகரித்து வரும் உலகளாவிய இணைப்புகளில் மாணவர்களின் வேலைவாய்ப்பு வாய்ப்புகளை மேம்படுத்துவதோடு, பல்வகை சர்வதேச சூழல்களுக்கு அவர்களை தயார்படுத்தும்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ், முதல் ஆண்டிலிருந்தே பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட குழுக்கள் உருவாக்கப்படும். இந்தக் குழுக்கள் 'Reengineering for Innovation' (புதுமைப்பாங்கிற்கான மறுபொறியியல்) என்ற பாடத்தின் கீழ் செயல்முறைப் பயிற்சிகளை மேற்கொள்வார்கள். மேலும், மாணவர்கள் நடைமுறை பயன்பாடுகள் மற்றும் தொழில்துறை நடைமுறைகளை நன்கு அறிந்து கொள்ளும் வகையில், பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இரண்டு பருவங்களில் தொழில்துறை சார்ந்த (IndustryOriented) பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பாடங்கள், தொடர்புடைய துறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்துறை சார்ந்த வல்லுநர்களால் கற்பிக்கப்படும். இந்நடைமுறை, பல்கலைக்கழகத் துறைகளில் முந்தைய கல்வியாண்டிலிருந்தே வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் உள்ள இளநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு, குறிப்பாக பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் படிக்கும் மாணவர்களுக்கு, கல்வி அடித்தளத்துடன் இணைந்து தொழில்நுட்ப, தொழில்முறை மற்றும் தனிநபர் திறன்களை மேம்படுத்துவதற்கான கட்டமைக்கப்பட்ட வாய்ப்புகள் தேவைப்படுகிறது. தற்போது, இத்தகைய பரந்த திறன்களை மாணவர்களுக்கு வழங்கும் திறன் மேம்பாட்டு பாடங்கள், தமிழ்நாடு அரசின் முக்கியத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் பிற துறை சார்ந்த நிபுணர்களுடன் நடத்தப்பட்ட விரிவான கலந்தாலோசனைகளுக்குப் பின்னர், இந்த திறன் மேம்பாட்டு பாடங்கள் பாடத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆசிரியர்களின் திறன் வளர்ச்சிக்காக தீவிரமான பயிற்சி திட்டங்களை வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இளநிலை பொறியியல் பாடத்திட்டத்தை, வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கும், தொழில்துறையின் மாறிவரும் தேவைகளுக்கும் ஏற்றவாறு, 'வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள்' குறித்த பாடங்கள், பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் (Artificial Intelligence & Machine Learning), தரவு அறிவியல் (Data Science) போன்ற முன்னணி தொழில்நுட்பங்களில் அறிவு பெறுவார்கள். இந்தப் புதிய தொழில்நுட்பப் பாடங்களில் திட்ட அடிப்படையிலான கற்றல் மற்றும் நேரடி செயல்முறை பயிற்சிகள் கட்டாயமாக இடம்பெறும்.

காலநிலை மாற்றம், வள குறைவு மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு குறித்து விழிப்பு ணர்வுகள் அதிகரித்து வரும் இவ்வேளையில், எதிர்கால பொறியாளர்களால் வடிவமைக்கப்படும் தீர்வுகள் தொழில்நுட்ப ரீதியாக சிறந்ததாக மட்டுமல்லாமல் சமூகப் பொறுப்புள்ளதாகவும் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை வாய்ந்ததுமாக இருக்க வேண்டும். இதனை கருத்தில் கொண்டு, தற்போதைய உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை (Climate Change and Sustainability) குறித்த பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாணவர்கள் தரநிலைகள் (Standards) எப்படி பயன்படுத்தப்படுகிறதென அறிய, பாடத்திட்டத்தில் தொழில்துறை தரநிலைகள் (Engineering Standards) குறித்த தனி பாடமும் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மாணவர்கள் தொழில்முறையில் பயன்படுத்தப்படும் பொறியியல் தரநிலைகள் மற்றும் குறியீடுகளை சரியாகப் பயன்படுத் தவும் கற்றுக்கொள்வார்கள்.

தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழில்முறை நிபுணத்துவத்துடன் கூடுதலாக, இன்றைய பொறியியல் பட்ட தாரிகளுக்கு வேகமாக மாறிவரும் உலகிற்கு ஏற்றவாறு தங்களை தகவமைத்துக் கொள்ளவும், வெற்றிபெறவும், வளரவும் அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்கள் தேவை. வாழ்க்கைத் திறன்கள் குறித்த படிப்புகள் முதல் இரண்டு செமஸ்டர்களில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் மாணவர்கள் உணர்ச்சி நுண்ணறிவு (emotional intelligence), நேர்மறை எண்ணங்கள் (positivity) போன்றவற்றின் முக்கியத்து வத்தைப் புரிந்துகொள்ள முடியும். முதல் முறையாக, மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்க்கவும் (sportsmanship), சுறுசுறுப்பான வாழ்க்கை முறைக்கு உடற்தகுதியை மேம்படுத்தவும் பொறியியல் பாடத்திட்டத்தில் உடற்கல்வி படிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அண்ணா பல்கலைக்கழக கல்வித் திட்ட குழு அண்மையில் நடந்த கூட்டத்தில் இது குறித்து ஆழ்ந்து பரிசீலித்து பாடத்திட்டங்களை மாற்றம் செய்ய முடிவு செய்துள்ளது. மாற்றம் செய்யப்பட்ட இந்த பாடத்திட்டம் பட்டதாரி மாணவர்கள் வேலை மற்றும் மேற்படிப்புக்காக வாய்ப்புக்கள் அதிகரிப்பது மட்டுமல்லாமல், எதிர்கால சவால்களை ஆற்றலோடு எதிர் கொள்ள பெரிதும் உதவும்.

இவ்வாறு அண்ணா பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கத்தில், மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா, தலைமையில் 26.08.2025 அன்று துவக்கி வைத்து, கைப்பந்து போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி. திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கோயம்புத்தூர் கற்பகம் பல்கலைக்கழகத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.